# சோனகதெருவில் பீப்பாக் குண்டிற்கு 9 பேர் பலி

யாழ் சோனக தெருவில் நேற்று முன்தினம் நள்ளிரவு விமானத்திலிருந்து வீசப்பட்ட பீப்பாக் குண்டுத் தாக்குதலிற்கு ஒன்பது பேர் பலியானதுடன இருபதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நள்ளிரவு வேளை கண்மூடித்தனமாக விசிய பீப்பாக் குண்டுத்தாக்குதலிற்கு ஒரே வீட்டிற் தங்கியிருந்த குழந்தைகள், பெண்கள், வயோதிபர் உட்பட ஒன்பது பேர் ஸ்தலத்தில் மாண்டனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கௌல ஜமீல் (33) சிபா ஜமீல் (12) பர்சாலா ஜமீல் (11) முனீரா ஜமீல் (6), சபீனா ஜமீல் (4) ஆகிய ஐவரும் அவ்விடத்திலேயே மாண்டனர்.

இவர்களுடன் எம். மீராகுதீன நாச்சியா (68) திருமதிகள் எம். பசீர்(45), ஜனபயா ரகீம் (32), சாயித்ரசீத் (14) ஆகியோரும் மாண்டவர்களாவர்.

காயமடைந்தோர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றனர். (லோ)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

## இப்படியும் டாக்டர்கள்

(சங்கானை)

சங்கானையில் தனியார் மருத்துவ மனையொன்றில், மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து வந்த குடும்பப்பெண் ஒருவர் மகப்பேற்றுக்காக அனுமதிக்கப்பட்டார். அந்த மருத்துவமனையின் ஜெனரேற்றரை இயக்க ஐந்துலீற்றர் டீசல் பெற்றுக் கொண்டபின் தான் அனுமதிக்கப்பட்டாராராம்.

சத்திரசிகிச்சைமூலம் பிள்ளையைப் பிறப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதும், டாக்டர் ரூபா 2, 500 தந்தால்தான் மகப்பேற்றைக் (4ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸு ஆவணி மீ 29 உ வெள்ளிக்கிழமை (14-09-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் 23 ஓசை 208

யாழ். கோட்டை முற்றுகை முறியடிப்புக்கான முயற்சி முறியடிப்பு

# விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

# படகுகள் மூழ்கடிக்கப்பட்டன

## 25க்கு மேற்பட்ட படை பலி; சில போராளிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

*யாழ். கோட்டை இராணுவ முகாம் முற்றுகையை முறியடிக்கும் சிறிலங்கா இராணுவத்தின் முயற்சி விடுதலைப்புலிகளினால் முறியடிக்கப்பட்டதோடு, சிறிலங்காவின் முப்படைக்கும் பல சேதம் ஏற்படுத்தப்பட்டது. விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. படகுகள் மூழ்கடிக்கப்பட்டன.*

*விடுதலைப்புலிகள் தரப்பில் சிலர் வீரமரணமடைந்தனர்.*

யாழ். கோட்டை முற்றுகையை முறியடிக்கும் சிறிலங்கா இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டது சம்பந்தமாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி நேற்று விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு.

யாழ். கோட்டைஇராணுவ முகாமை எமது முற்றுகைக்குள் இருந்து மீட்பதற்காக சிறிலங்கா முப்படைகளினாலும் மேற்கொள்ளப்பட்ட பாரிய முயற்சி ஒன்று எம்மால் முறியடிக்கப்பட்டது. இந்த முயற்சியின்போது சிறிலங்காவின் குண்டுவீச்சு விமானம் ஒன்று எம்மால் மண்டைதீவுக் கடலுக்குள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

நேற்று, அதிகாலை சுமார் 5.30 மணியளவில் மண்டைதீவிலிருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் யாழ். கோட்டையை நோக்கி படகுகள் மூலம் முன்னேற முயன்றனர்.

இவர்கள்மீது கடலுக்குள் வைத்தே எம்மால் தாக்குதல் நடாத்தப்பட்டது. இத்தாக்குதலின போது 25இற்கும்மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்துள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கிப் படகுகள் கரைதட்டின புலிகள் படகு மீது தாக்குதல்

(மண்டைதீவு)

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும், கடற்படையினரும் கூட்டாகச் சேர்ந்து யாழ் கோட்டையை நோக்கி முன்னேறுவதற்கென கஜபாகு கப்பல் மூலம் நான்கு சிறிய படகில் சிறுத்தீவு ஆத்துவாயை நோக்கிச் சென்று கொண்டிருந்த நேரம் கடல்நீர் ஆழம் காணாமையினால் அப்படகுகள் நான்கும் கரையைத் தடடிக் கொண்டன இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்கொண்டு தாக்கினர். இத்தாக்குதலில் படையினர் சிலர் இறந்திருக்கலாமென புலிகளின் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இப்படகுகளைப் பாதுசாக்க (4ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் கடத்தும் முயற்சி முறியடிப்பு

(சென்னை)

இந்தியப் பயணிகள் விமானசேவை போயிங் 737 ரகவிமானம் ஒன்றை கொழும்புக்குக் கடத்த முனைந்த ஒரு பொறியியல் மாணவர் முயற்சி முறியடிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கோயம் புத்தூரில் இருந்து பெங்களூர் வழியாக சென் (4ஆம பக்கம் பார்க்க)

## பீப்பா குண்டிற்கு குழந்தை பலி

(வடமராட்சி)

சிறிலங்கா விமானப்படை அவ்ரோ விமானம் நேற்று பொலிகண்டி பகுதியில் நடத்திய பீப்பாகுண்டு தாக்குதலில் ஒரு குழந்தை உயிரிழந்தது மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆயர் மயிரிழையில் உயிர் தப்பினார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சினால் யாழ். ஆயர்வாசஸ்தலமும், அதனுள் இருக்கும் சிறு தேவாலயமும் சேதமடைந்தன. அதேவேளை ஆயர் எதுவித காயமுமின்றி உயிர் தப்பினார்.

அதேவேளை ஆயருக்குக் கடமை செய்த செல்வன் (22 வயது, மன்னார்) படுகாயம் அடைந்தார் அத்துடன் அங்குள்ள சம்பத்திரியார் கல்லூரி கட்டிடமும் பலத்த சேமடைந்துளளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு படை பலி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமில் உள்ள காவல் அரண் ஒன்றில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா சிப்பாய் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் அச்சிப்பாய் கொலை செய்யப்பட்டார்.

## கோட்டை முற்றுகையை முறியடித்ததாக அரசு அறிவிப்பு

(கொழும்பு)

மூன்று மாதங்களாக விடுதலைப் புலிகளின் முற்றுகையில் இருந்த யாழ் கோட்டையைச் சிறிலங்கா இராணுவம் கடற்படை, விமானப்படை, என்பவற்றின் உதவிகொண்டு முறியடித்துவிட்டதாகப் பாதுகாபபுச் செயலாளர் செனிவிரத்னா தெரிவித்ததாகச் சிறிலங்கா வானொலி அறிவித்தது.

நேற்றுக் காலை 7.30 மணியளவில் கோட்டை முற்றுகையை முறியடித்து இராணுவம் கோட்டைக்குள் சென்றதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது. விடுதலைப்புலிகளுக்கெதிரான இம்முற்றுகையில் விமானப் படையின் ஹெலிகொப்ரர்களும், கடற்படை பீரங்கிப்படகுகளும் புலிகளின் பதுங்குகுழிகளை அழித்ததாக (4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்லுக்கு 2 பெண் பலி

(மட்டக்களப்பு)

ஓட்டைமாவடி சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இராணுவத்தினர் ஷெல்தாக்குதல் மேற்கொண்டனர்.

இந்த ஷெல் தாக்குதலில் இரண்டு பெண்கள் பலியாகி உள்ளனர் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

## இரு ஊர்காவற்படை இரு இராணுவம் பலி

(மட்டக்களப்பு)

ஏறாவூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரையும், சிங்கள ஊர்காவல் படையினரையும் எதிர்த்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலிலிரு இராணுவத்தினரும், இருசிங்கள ஊர்காவல் படையினருமாக நான்கு பேர் உயிரிழந்தனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து ஏனைய இராணுவத்தினரும், ஊர்காவல் படையினரும் முகாமிற்கு ஓடிவிட்டனர்.

## சாகாமத்தில் பொதுமக்கள் பலர் படுகொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சாகாமம் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப் படை கொமோண்டோக்கள் தமது கொலை வெறியை காட்டியுள்ளனர்.

இக்கிராமததில் புகுந்த இராணுவத்தினர் பல பொது மக்களை ஈனத்தனமாக கொலை செய்துள்ளனர்.

## வீரமரணம

மைலிட்டி காவலரணில் இடம் பெற்ற இராணுவத்தி (4ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய போரில்...

"போருடை தரித்து படைகலம் தாங்கிய பொதுப்படைகளுக்கிடையில் ஒழுங்காக நடத்தப்படும் போட்டியே போர்" என போருக்கு வரைவிலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது.

இது யதார்த்த நிலைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். இன்று பெரும்பான்மையான போர்கள் போருடைதரித்தவர்களிடையே நடைபெறுவதில்லை.

இன்று உலகெங்கணும் நடந்து கொண்டிருப்பது 'கெரில்லாப்போர்'. இப்போர் ஒழுங்காகவும் நடத்தப்படுவதில்லை. இப்போர் முறையில் அழிந்தொழிவது பொது மக்கள் தான்.

இதை அறியாத நம்மவர்கள் பண்டைக்காலப் போர் பற்றியே சிந்திக்கிறார்கள். பெண்கள், குழந்தைகள், நோயாளிகள், அந்தணர், பசுக்கள் போர் அழிவுகளிலிருந்து பாதுகாக்கப்பட்டது போன்று இன்றும் காக்கப்பட வேண்டும் என நியாய பூர்வமாக விரும்புகிறார்கள்,

ஆனால் போர் என்றால் அழிவு என்பதுதான் அதன் அர்த்தம் என்பதை மறந்துவிடலாகாது.

அழிப்பு, எரிப்பு, கொள்ளை கொலை, மானபங்கம் இல்லாத போரைக் காட்டவே முடியாது.

சேர சோழ பாண்டியர்களும் அழித்தார்கள்; உரோமியர்களும் அழித்தார்கள்; கிரேக்கர்களும் அழித்தார்கள்; ஆங்கிலேயர்களும அழித்தார்கள். அழித்தல் என்பது போர்ப்படைக்குள்ள விசேட குணமாகும். பொதுவாக படைத்தளபதிகளே அழிப்புக்கு "மடை மாற்றி" விடுவதுண்டு.

எனவே சிங்களவன்தான் அழிக்கிறான் என ஓலமிடுவதில் கருத்தில்லை.

இன்றைய நிலையில் சிங்கள இனவாதப்படையின் அழிப்பிலிருந்து எமது சொத்துககளை எப்படிப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றே சிந்திக்க வேண்டும்.

படையினர் கைப்பற்றும் இடங்களிலிருக்கக்கூடிய வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், நூல் நிலையங்கள்,

> சொத்துப் போனால் திருப்பிப் பெறலாம்; ஆனால் சுதந்திரம் போனால்···? சிந்தித்துப் பார்க்கவேண்டும்.
> அழியக்கூடிய சொத்தின் ஒரு பகுதியை மேலும் தமிழீழ மீட்பு நிதியத்தில் சேர்க்கலாமல்லவா?

கோயில்கள், தேவாலயங்கள் என்பவற்றை அவர்கள் எரியூட்டி அழிப்பதைத் தடுக்க முடியாது.

கட்டடங்களை "பீப்பாத் தாக்குதல்" களிலிருந்தும் ஆட்டிலெரி ஷெல்களிலிருந்தும் காப்பாற்ற முடியாது

எனவே பெறுமதிமிக்க சில பொருட்களை மட்டும் அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடங்களில் வைக்கவேண்டும்.

"பாதுகாப்பான இடம் என்பது சிக்கலான ஒரு விடயம்; என்றாலும் நில அறைகள், வங்கிக்கிடங்குகள் போன்றவற்றையே அது குறிப்பது கவனிக்கத்தக்கதாகும்.

அடுத்து எதிரி சொத்தழிப்பில் ஈடுபடுவதேன் என்பதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

அது போர்த் தந்திரங்களில் பிரதானமானதோர் உத்தியாகும்.

முதலாவது: எதிரியின் பொருளாதாரஅடிப்படையை அழித்து அவனைப் பலவீனப்படுத்தல்

இரண்டாவது: அழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம் எதிரியை திகில் அடையச் செய்து அவனின் தாக்குதல் நடவடிக்கைகளை குறைக்கச் செய்தல்.

மூன்றாவது: சொத்தழிப்பால்பாதிக்கப்பட்ட மக்களை அவர்களுடைய படைக்கு எதிராகவே கிளர்ந்தெழச் செய்தல்.

இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் சிங்களப்படை அழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கண்டு நாம் மனம் சோர்ந்து விடலாகாது.

சிங்களப் படையின் தந்திரத்துக்கு நாம் பலியாகிவிடக் கூடாது.

சொத்துப் போனால் திரும்பிப் பெறலாம்; ஆக்கிக் கொள்ளலாம். ஆனால் சுதந்திரம் போனால்...? சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அழியக்கூடிய சொத்தின் ஒரு பகுதியை மேலும் தமிழீழ மீட்பு நிதியத்தில் சேர்க்கலாமல்லவா?

நாம் இன்றைய நிலையில் கொடுக்கும் ஒவ்வொரு சதமும் அதி பெறுமதி வாய்ந்தது என்பதை மறககக்கூடாது.

ஒவ்வொரு குடும்பத்திலுள்ளவர்களும் நாளொன்றுக்கு தலா ஒரு ரூபாய் வீதம் கொடுததால் போதுமே.

சிறு துளி பெரு வெள்ளம் என்பதை கருத்திற் கொண்டு செயற்படவேண்டும்.

> நாம் சமூக நலம் உள்ளவர்களாக – சமுதாய உணர்வு உள்ளவர்களாக செயற்படுவோமாயின் எந்தப் பயலும் "வாலை ஆட்டமாட்டான்" என்பதை மனதில் இருத்திக் கொள்ளவேண்டும்.

ஆனாளப்பட்ட இராமனுக்குக் கேவலம் ஒரு அணில் உதவி செய்தது தெரியாதா? உதவியில் சிறு உதவி பெரும் உதவி என்றில்லை. தினைத்துணையாகினும் அது பயனுடையதாகவே இருக்கும்.

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர் என்றான் பாரதி. போராளிகள் இன்று இரண்டு தங்கப் பவுண் தான கேட்டு நிற்கிறார்கள். நிதி மிகுந்தவர்கள் தங்கம் தங்கமாகக் கொடுத்துதவவேண்டும்.

துர்க்கை அம்மனுக்கு அன்று எமது பெண்மணிகள் தலா ஒரு தங்கப் பவுண் கொடுத்தார்கள் என்றால் இன்று - இன்றைய இக்கட்டான சூழ்நிலையின் தேவை கருதி - அவர்கள் தலா பத்துப்பவுண்களை கொடுக்காமலா விடுவார்கள்?

போர்க்காலங்களில் பெண்கள் சோர்ந்து போய் இருந்ததை வரலாற்றில் எங்கணும் காணமுடியாது. எமது தாய்மார்களும் இன்றைய சூழ்நிலையில் தமது பங்களிப்பைச் செய்வார்கள் என்பதில் ஐயமில்லை.

போர்க் காலத்தில் தமது வதிவிடங்களை விட்டு இடம் பெயர்பவர்களின் சொத்துக்களை அபகரிப்பவர்கள் பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

வீடுகளில் இருக்கக் கூடிய பெறுமதி வாய்ந்த பொருட்களை மாத்திரமன்றி யன்னல்கள், கதவுகள், நிலைகள் என்பனவற்றைக் கூட களவாடும் கயவர்கள் நம் மத்தியில் உள்ளனர்.

"அவன் எடுத்துக் கொண்டு போறான், எனக்கென்ன? என்ற மனப்பான்மையுடன் நாம் இருக்கக்கூடாது. அவர்களைப் பற்றிய முழுவிபரங்களையும் அயலிலுள்ள போராளி முகாமில் கொடுப்பது நமது கடமையாகும்.

அகதிகளாக இடம்பெயர்பவர்கள் நம் சகோதரர்கள் என்பதை மறந்துவிடலாகாது. அவர்களுடைய சொத்துக்களைப் பாதுகாப்பது எமது கடமையாகும்.

எத்தகைய திருட்டுச் சம்பவத்தைக் கண்டாலோ அல்லது அதுபற்றிக் கேள்விப்பட்டாலோ தயங்காது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அகதிகள் சில சந்தர்ப்பங்களில் தமது நகைகளையோ, ரேடியோ ரெலிவிசன் சயிக்கிள் என்பனவற்றைபோ விற்க முன்வரலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் 'தவித்த முயல் அடிக்கப் பார்த்தல்' மனிதாபிமான மற்ற கேவலமான செயலாகும்.

அவர்கள் வியாபாரம் செய்யவில்லை; தவிர்க்கமுடியாத நிதிப்பற்றாக்குறை காரணமாகவே தமது உடைமைகளில் சிலவற்றை விற்க முன்வருகிறார்கள் என்பதை மறந்துவிடலாகாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அகதிகளை சுரண்டலாமா? அவர்களை ஏமாற்றலாமா? தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள்.

நாமும் தமிழரெனச் சொல்லிக்கொண்டு போர்நிலையைப் பயன்படுத்தி துரித பணக்காரராகப் பார்ப்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.

தமிழினம் வந்தாரை வரவேற்று வாழ்வளித்த இனம்.

அந்த இனம் இன்று சொத்து சுதந்திரங்களை இழந்து தவிக்கிறது.

எரிகிற வீட்டிலே பிடுங்கிக் கொண்டவன் போல இன்றைய சூழ்நிலையைப் பயன்படுத்தி களவாடுபவன், சுரண்டுபவன், பதுக்குகிறவன் இருக்கத்தான் செய்வான்.

"எனக்கென்ன? என நினைத்து நாம் வாழா இருக்கும் மட்டுந்தான் அவனால் ஆட முடியும்" என்பதை நாம் மறந்துவிடலாகாது.

நாம் சமூக நலம் உள்ளவர்களாக - சமுதாய உணர்வு உள்ளவர்களாக, செயற்படுவோமாயின் எந்தப் பயலும் "வாலை ஆட்டமாட்டான்" என்பதை மனதில் இருத்திக் கொள்ள வேண்டும்.

இன்று சிங்களப் படையின் அழிப்பு நடவடிக்கைகள் ஒரு புறம், நம்மவர்களின் சுரண்டல் நடவடிக்கைகள் மறுபுறம். மக்கள் இருதலைக் கொள்ளி எறும்புகளாய் தவிக்கிறார்கள்.

அவர்களைப் பாதுகாப்பது எமது கடமை அல்லவா?

அவர்களின் பொருட்கள் களவாடப்படாதவாறு பார்த்துக்கொள்ளுவோம்.

அவர்களைப் புத்தியுள்ள தந்திரசாலிகள் ஏமாற்றாது பார்த்துக் கொள்ளுவோம்.

பொருட்களைப் பதுக்கி வைத்து "அறாவிலையில்" விற்று மக்களை அறுப்பவர்களை இனங்கண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்போம்.

★

# எமது இனத்தின் விடிவிற்காக..

இன்று தமிழீழ மக்களுக்கெதிராக ஒருயுததம் பிரகடனப்படுத்தபபட்டு கடல், ஆகாயம், தரை ஆகிய மூன்று மார்க்கங்களாலும் அவர்களுடைய உயிர்களும் உடைமைகளும் கட்டடங்களும் அழிக்கப்படுகின்றன. உணவுத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிககப்பட்டு தொழிற்சாலைகள், மில்கள் இயங்காதுள்ளன. வயல்களிலும, தோட்டங்களிலும் நீரின்றி பயிர்கள் மடிகின்றன மின்சாரமும் மண்ணெண்ணெய்யும் இல்லாதமையாலும் பாடசாலைகள் இயங்காதமையாலும் எமது பிள்ளைகளின் படிப்பு பாழடிக்கப்பட்டுள்ளது. ஆயுதங்களாலும், பட்டினி போட்டும், பொருளாதார முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகள் போட்டும், கல்விக்கு குந்தகங்களை ஏற்படுத்தியும் மற்றும் தன்னால் இயன்ற அத்தனை கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு அநாகரிகமான அரசாங்கம் இங்கு தமிழ் இனத்தையே பூண்டோடு அழித்துவிட முயன்று கொண்டிருக்கிறது.

கடந்த இரு மாதமாக நாங்கள் அனுபவித்து வரும் அவலங்கள் இதுவரையில் எமக்கு நிறையப்பாடங்களைப்புகட்டிவிட்டன. மா, சீனி, அரிசி, மண்ணெண்ணெய் ஆகிய பொருட்களுக்கு நாயாய் அலைந்து திரியும் நாங்கள் இந்தப் பொருட்களுக்கு அரசாங்கத்திலும் ஏனைய பல பொருட்களுக்கு தெற்கிலும் தங்கியிருந்தமையே எமது முக்கிய பலவீனம் என்பதை உணர்ந்து விட்டோம். ஆகவே இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து எங்களை நாங்களே விடுவித்துக்கொள்ளவேண்டும்.

எல்லாவற்றையும் போராளிகளே செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதை விடுத்து விடுதலைக்காகப் போராடும் இனம் என்ற வகையில் பொது மக்களாகிய நாங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பல உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே அலசி ஆராய்வோம்.

எமக்குத் தேவையான அனைத்து உணவுப் பொருட்களையும் உபஉணவுப்பொருட்களையும் இதர பொருட்களில் இயலுமான அனைத்தையும் நாங்களே உற்பத்தி செய்ய வேண்டும். நலல நீர் வசதியுள்ள அனைத்து நிலங்களிலும் பொருத்தமான பயிர்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். அதிர்ஷ்டவசமாக இந்த முயற்சிக்கு ஊக்கமளிக்கும வகையில் நிறையக் கட்டுரைகள் தமிழீழப் பத்திரிகைகளில் இபபோது வெளி வந்து கொண்டிருக்கின்றன. இந்த முயற்சியில் ஈடுபடும் போது நாங்கள் எமது தாக்குப்பிடிக்கும் சக்தியை அதிகரிப்பதோடு எமது போராளிகளுக்கும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளிப்பவர்களாகி விடுகிறோம்.

இலங்கை சுதந்திரமடைந்த நாள தொட்டு எமது இனம் அழிக்கப்பட்டு வருகிறது. பலியாகிறவர்களில் பெரும்பான்மையோர் எமது போராட்டத்திற்கு இன்றியாமையாத இளைஞர்களும் யுவதிகளுமே. இன்றைய சூழ்நிலையில்

திருவெண்காடார்

எமக்கு அத்தியாவசியமானது மனித உயிர்களும் மனித சக்தியுமே

தமிழீழத்தில் தமிழ் பேசும் மக்களின் தொகை அதிகரிக்சப்பட வேண்டும். ஆகவே இலங்கையின் பிற மாவட்டங்களிலிருந்து எமது மக்கள் இங்கு வந்து குடியேறுவதற்து நாங்கள் எம்மால் இயன்ற சகல உதவிகளையும் செய்ய வேண்டும் அவர்களுக்கு இருப்பிட வசதிகளையும் வேலவாய்ப்பு வசதிகளையும் நாமே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இலங்கை, இந்தியப் படைகளாலும் போராளிகள் என்று தங்களைக் கூறிக் கொண்டு கொலை, கொள்ளை ஆகியவற்றில் ஈடுபட்ட தமிழ் துரோகக் கும்பல்களாலும விதவைகளாக்கப்பட்ட பெண்கள் பலர் இன்று எம்மிடையே உள்ளனர். தாங்கள் செய்யாத தவறுகளுக்காக காலம் காலமாக சமூகத்தால் ஒதுக்சப்பட்டு அவல வாழ்வு வாழும் இந்த அபலை விதவைகளுக்கு மறுவாழ்வளிக்க முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட தமிழ் இனப்பற்று மிகுந்தவர்கள் முன்வரவேணடும்.

சிகரெட், சாராயம் போன்ற மதுவகைகளும், குளிர்பானங்கள் போன்ற பொருட்களின் மேல்வரி விதிப்பதன் மூலமே அரசாங்கம் நிறைய வருமானத்தைத் தேடிக்கொள்கிறது. இப்படிப் பெறப்படும் பணமே இன்று எம்மை அழித்தொழிககவும் பயன்படுததப்படுகிறது. ஆகவே எமது அழிவிற்கு நாங்களே துணைபோகாமல் இநதப் பொருட்களை வாங்குவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும். தமிழீழ மக்களிடையே மிக்க பிரபல்யம் அடைந்துள்ள ஒரு குளிர்பான நிறுவனத்தில் எட்டு வீதமான பங்குகளை வைத்துள்ள ஒரு முன்னைய உத்தம பிரமுகர் இலங்கை யுத்த நிதிக்கு அரை லட்ச ரூபாய்களை வழங்கினார் எனபதை நாங்கள் இத்தருணத்தில் நினைவுகூர வேண்டும.

நாங்கள் அரச நிறுவனங்களில் சேமிக்கும் பணமும் எம்மை அழித்தொழிககப் பயன்படுத்தப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் கிளைகளைக் கொண்டுள்ள சேமிபபு நிறுவனங்களும் அரசின் யுத்தநிதிக்கு தாராளமாக உதவிவருகின்றன. இவற்றினை நன்குணர்ந்து நாம் சேமிக்கக்கூடிய எமது பணங்களை பிறவழிகளில் பயன்படுத்த வேண்டும்.

தரத்தில் குறைந்தவையாயினும் விலை கூடியவையாயிருப்பினும் நாங்கள் இயன்றவரை எம்மவர்களால எமது பிரதேசத்தில் தயாரிககப்படும் பொருட்களையே வாங்க வேண்டும். நாங்கள் உள்ளூர்ப் பொருட்களை வாங்க முற்படுமபோது பொருட்களைத் தயாரிப்பவர்களிடையே போட்டி அதிகமாகி காலக்கிரமத்தில் நல்ல தரமான பொருட்களை மலிவான விலையில் வாங்கக்கூடியதாக இருக்கும்.

எமது போராட்டம் வெற்றியடையவும் எமது இனத்தின் நன்மை, ஒற்றுமை, முன்னேற்றம ஆதியன கருதியும் நாங்கள் பரநது கிடக்கும் எமது பிரதேச மக்களுக்கிடையே திருமண பந்தங்களை ஏற்படுத்த வேண்டும். இபபடியான பந்தங்களை ஏற்படுத்தும் போது எம்மிடையே உயர்வு தாழ்வு பாராது கலப்புத் திருமணங்களையும் உற்சாகப்படுத்த வேண்டும்.

பழைய சம்பிரதாயங்களில் மூழ்கிக் கிடக்கும் முதிய உறவினர்களின எதிர்பபுகளைப் பொருட்படுத்தாது எமது இளைஞர்கள் பெருந்தொகை சீதனங்களை வறபுறுத்தாது எமது யுவதிகளுக்கு வாழ்வளிக்க முன்வரவேண்டும்,

★

## சிந்தனைக்கு

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு
வேறொன்று கொள்வாரோ!

— மகாகவி பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14-09-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# உங்களையும் காத்து மற்றவர்களுக்கும் உதவுக

யாழ். கோட்டையைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலை சிறிலங்கா அரசாங்கம் முடுக்கிவிட்டுள்ளது.

இதனால் யாழ்நகர்மீது சிறிலங்கா முப்படைகளும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதலையும், பீரங்கி ஷெல் தாக்குதலையும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றன. நேற்று முன்தினம் இரவில் இருந்து ஆரம்பமாகிய இத்தாக்குதல் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றது.

இத்தாக்குதலின்போது கோயில்கள், ஆஸ்பத்திரிகள், பொது இடங்கள் எவையும் தப்பும் என்பதற்கில்லை. கடந்த காலத்திலும் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. தற்பொழுது இடம்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக நேற்று முன்தினம் இரவு பள்ளிவாசல் ஒன்றின்மீது விமானத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதனால் எட்டுப் பேருக்கு மேல் முஸ்லிம் மக்கள் கொல்லப்பட்டதாகவும், இருபது பேருக்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தச் சண்டையின்போது சிறிலங்கா முப்படைகளும் தங்களின் முழுப்பலத்தையும் பிரயோகிப்பார்கள் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. ஆகையினால் மக்கள் மிகவும் அவதானமாகவும் பாதுகாப்பாகவும் இருத்தல் வேண்டும்.

முக்கியமாக மக்கள் கூட்டமாகச் சேர்ந்து நிற்றல், வேடிக்கை பார்த்தல் என்பன தவிர்த்துக்கொள்ளப்பட வேண்டும். கூட்டமாக மக்கள் சேர்ந்திருப்பது எதிரியின் இன அழிப்பிற்கு மிகவும் சுலபமாகப் போய்விடும். அதேவேளை மக்கள் மற்றவருடன் தொடர்பற்றும் இருத்தல் கூடாது.

இன்றைய யுத்த வேளையில் சிறிய காயங்கள் ஏற்படுவதே உயிராபத்தை விளைவித்துவிடும். வைத்தியசாலைக்குக் காயப்பட்டவர்களைக் கொண்டு செல்வதற்குப் போதிய வாகன வசதிகள் இல்லை. அதற்கும் மேலாக கொண்டு செல்லும் வாகனங்கள் விமானப்படையின் தாக்குதலுக்கு உள்ளாகக் கூடும். இதனால் கொண்டு செல்வதே சிரமமாகி விடும்.

யுத்தம் தொடங்கியதில் இருந்து மூன்று மாத காலமாக வைத்தியசாலைகளில் போதிய மருந்துகளும் வைத்தியர்களும் இல்லை அத்தோடு வைத்தியசாலையில் வசதிகளும் இல்லை. இந்நிலையில் காயமடைந்தவர்களுக்கு வைத்திய வசதியும் திருப்தியாகக் கிடைக்கும் என்பதற்கில்லை.

அடுத்ததாக வைத்தியசாலையில் உள்ள இரத்த வங்கியில் போதிய இரத்தம் இருப்பில் இல்லை. இதனால் காயமடைந்தவரிடம் இருந்து இழக்கப்படும் இரத்தத்திற்குப் பதில் இரத்தம் செலுத்தவும் முடியாதநிலை உள்ளது.

இவ்வாறான நெருக்கடி நிலை இருப்பதனால் மக்கள் சிறிய காயங்கள் ஏற்படுவதைக் கூட தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மக்கள் கவனமாக இருக்கும் பட்சத்தில் சிறிதளவு உள்ள மருந்துகளையும், ஏனைய வசதிகளையும் தவிர்க்க முடியாமல் காயமடைந்தவர்களுக்குப் பாவிப்பதற்கு உதவியாக இருக்கும். இவ்வாறு முன்னேற்பாட்டுடன் நடந்துகொள்வீர்களானால் அதாவது உங்களைப் பாதுகாப்பதோடு மற்றவர்களுக்கும் உதவியவர்கள் ஆவீர்கள்.

# ஐ. நா. பந்தோபஸ்து சபை மீது இந்தியா குறை கூறுகிறது

ஈராக் - குவைத்தில் சிக்கியுள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் அனுப்புவதற்கு ஐ. நா. பந்தோபஸ்து சபை அனுமதி வழங்க தாமதிப்பதை இந்தியா குறைகூறியுள்ளது.

இது தொடர்பாக இந்தியா மீண்டும் பந்தோபஸ்துச் சபை தலைவருடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்தியாவுக்கான ஐ. நா. தூதுவர் இது தொடர்பாக பந்தோபஸ்துச் சபை தலைவருடன் தொடர்பு கொண்டு இந்தியாவின் ஏமாற்றத்தையும் கவலையையும் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் இக் கோரிக்கைக்கு பந்தோபஸ்துச் சபையில் அமெரிக்காவும், பிரிட்டனும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

# "புலிகள் தமது நோக்கத்திற்காக அயராத முயற்சியுடனும் திடமான நோக்குடனும் போரிடுகிறார்கள்"

(நேற்றைய தொடர்ச்சி)

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் நூறு ஆயிரம் கவசப்பிரிவுகளைக் கொண்ட நடுத்தரத்தாங்கிகள், நீண்ட தூரம் தாக்கக் கூடிய பீரங்கிகள், துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிஹொப்டர்கள், பீரங்கி தாங்கிய காலாட் படைகள் முதலியவற்றைக் கொண்டு தான் இராணுவத்தை உண்மையாகக் கட்டியமைக்கலாம்.

இராணுவத்தில் உயர் மட்ட அதிகாரிகளின் சிறந்த தலைமைத்துவமும், போரிட வேண்டும் என்ற சிப்பாய்களின் மனப்போக்கும் ஜூன் மாதத்தில் ஆரம்பமான யுத்தத்தைச் சூடுபிடிக்கச் செய்துள்ளது.

இராணுவம் எத்தனை காலம் தான் இந்நிலையில் தொடர்ந்திருக்க முடியும் என்பது இப்பொழுதுள்ள கேள்வியாகும். அதிகமாகப் பேசப்படும் இராணுவத்தில் உயர் மனோநிலை எதுவரைகாலம் நீடிக்கப் போகிறது? மென்மேலும் இழப்புகளைச் சந்திக்க நாடு தயாராகவுள்ளதா? யுத்தமானது தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்குத்தான் என்றும், அது என்றும் ஒழியப் போவதில்லை என்றும் இராணுவ அதிகாரிகளும், சிப்பாய்களும் சொல்லக் கேட்டுள்ளேன்.

யுத்தத்தில் காயப்பட்ட சிப்பாய்கள் மறுபடியும் யுத்த முனைக்குத் திரும்புவார்கள் என்பதில் உண்மை உண்டா? நூற்றுக்கணக்காக அங்கவீனர்களாக முடங்கிக் கிடப்பவர்களுக்கும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களுக்கும் நாடு என்னத்தை வழங்கவுள்ளது?

நாடு இன்றும் இராணுவத்துக்கு ஆதரவாகவுள்ளதா? அல்லது கொழும்பு நகரில் ஒட்டப்படும் சுவரொட்டிகள், பதாகைகள் போல், ஜூன் மாதத்தில் யுத்தம் முடுக்கி விடப்பட்டபோது ஆயுதப் படையினருக்கு இருந்த ஆதரவு மங்கிக் கொண்டு வருகிறதா? கஷ்டத்தில் வாழ்பவர்களுக்கும், கிராமப்புற இளைஞர்களுக்கும், படிப்பை இடைநடுவில் கைவிடப்பட்டவர்களுக்கும் தான் இராணுவ சேவையா? யுத்த முனையில் சண்டையிடுவதற்காக கொழும்புப் பள்ளிக் கூடங்களைச் சேர்ந்த எத்தனை பேர் பட்டாளத்தில் சேர்ந்துள்ளார்கள் என்ற கேள்வியை எழுப்பிப் பாருங்கள்?

கட்டாய தேசிய இராணுவ சேவைக்கான காலநேரம் இதுதான். நாட்டாண்மையையும், நாட்டின் செல்வங்களையும் பாதுகாக்க ஒவ்வொரு தாயும் தன் மகனை யுத்த முனைக்கு அனுப்புவதில் பெருமை கொள்ள வேண்டும் அல்லவா? இன மத வேறுபாடு, அரசியல் செல்வாக்கு, கல்வி நிலை ஆகியவற்றை மறந்து தேசிய இராணுவ சேவையில் சேர்வதற்கான வயதெல்லையை எய்திய ஆண்கள் பட்டாளத்தில் சேர்ந்து நாட்டுக்காக உழைக்க முன்வர வேண்டும்.

இப்படியாக இளைஞர் இராணுவச் சேவையில் சேர்ந்து கொள்வதால் இராணுவத் தேவை ஒன்று பூர்த்தியடைவதுடன், அரசியல் கட்சிப் பூசல்கள், மரபுரீதியான சம்பிரதாயங்களும் அற்றுப் போய் நாட்டு மக்கள் ஒன்றிணையவும் ஏதுவாகும்.

**இந்திய மருத்துவ உதவி**

பொருளாதார சமன்பாட்டைப் பற்றி இப்பொழுது ஆராய்வது என்பது பயனற்றது. 'யுத்தத்தில் பணத்தை இறைத்து யுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதோ, அல்லது யுத்தத்தை இழுத்தடிப்பதன் மூலம் நாட்டை இம்சைக்குள்ளாக்கி தலைதூக்க முடியாத நிலைக்குத் தள்ளுவதோ என்பதைப் பொருளியலாளர் நன்கு உணர்ந்திருக்கவேண்டும்.

வருமானத்தைத் தரும் ஈராக்குடனான தேயிலை வியாபாரத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டை, குவைத்தில் தொழில் செய்தவர்களின் வருமானத்தில் ஏற்பட்ட தடை ஆகியன பற்றிச் சிந்திப்பது நாட்டை நெருக்கடியிலிருந்து காப்பாற்றப் போவதில்லை, ஈராக்கிலிருந்து நாம் எதிர்பார்த்திருந்த உதவியைப் பற்றிப் பேசுவதையும் நாம் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இந்தியாவின் தந்திரங்களைச் சமாளிப்பதற்கு அரசாங்கத்தின் பிரயத்தனம் சுலபமானதல்ல. ''றோ'' ரோஜன் குதிரைப் போர்வையில் வைத்திய உதவி யாழ்ப்பாணம் வந்து சேருகின்றதா? கிழக்கில் வாழும் தமிழர் நிலை குறித்து இந்தியா அக்கறை கொள்ளாதது ஏன்? அவர்கள் செய்த பிழை என்ன? கிழக்கிலங்கையில் உள்ள முஸ்லிம்களுக்கு இந்தியாவின் உதவியை நம்மவர்களால் பெற முடியாதா? எப்படியாயினும முஸ்லிம் மக்கள்மேல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது 500பேர் கொல்லப்பட்டும் 800பேர் காயப்பட்டும் உள்ளார்கள்.

இன்று ஆயுதப்படையினர் நகரமுடியாத நிலையில் சிக்கியுள்ளார்கள் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. பலாலி இராணுவ முகாம் தடைகளைத் தகர்த்து கோட்டையுடன் இணைத்துக் கொள்ள முடியுமா? ஐந்து முனைகள் அமைத்து 18 இந்திய இராணுவப் பிரிவுகள் யாழ் கோட்டையை அடைய ஏழு நாட்கள் எடுத்தன. இன்று விடுதலைப் புலிகள் கொத்தளம் அமைத்து எண்ணிக்கையில் அதிகமாகி ஆயுத பாணிகளாக ஒரு நீண்டநாள் யுத்தத்துக்குத் தயாராக உள்ளனர்.

வவுனியாவிற்கு வடக்கே செய்யக்கூடிய காரியம் என்ன? பரந்தன்வரை உள்ள பிரதேசம் புலிகள் கட்டுப்பாட்டில் உள்ளது. மாங்குளத்திலும், முல்லைத்திவிலுமிருந்து இரண்டு மைல்களுக்கப்பால் எதிரிகள் பிரதேசமாகும்.

இராணுவத்தையும் ஆள் அணியையும் வைத்துக் கொண்டு நாட்டை வழமைக்குத் திருப்ப முடியுமா?

கிழக்கிலிருந்து மேற்குவரை ஒரு கோட்டைக் கிழித்து பொருளாதாரத் தடையை விதிப்பதான் மூலம் நீண்டகாலயுத்தத்தை எதிர்கொண்டு விடுதலைப் புலிகளைத் திணறடிக்கலாம் இதனால் அரசாங்கம் கிழக்குடன் மீளவும் தொடர்பைஏற்படுத்தவும் மக்களின் அங்கீகாரத்தையும்பெற முடியும். இவ்வழிவகைகள் ஆயுதப்படையைப் புனரமைப்பதற்கும், ஆயுதங்களை மீளவும், அதிகரிக்கவும் புதிய உத்வேகத்தைப் பெறவும் உதவும். விடுதலைப் புலிகளுக்கான விநியோகத் தொடர்பு துண்டிக்கப்படுவதன் மூலம் அவர்கள் சோர்வடைவார்கள்.




**கேர்ணல் சுனில் பீரிஸ்**

பிரிட்டிஷ் இராணுவக் கல்லூரியில் பட்டம் பெற்றவரும், பாகிஸ்தானில் விஷேட பயிற்சியும், பிரிட்டிஷ் எஸ். ஏ. எஸ் அதிகாரிகளால் பயிற்றுவிக்கப்பட்டவருமான இவர் லிபரேஷன் ஒப்பரேஷனில் முக்கிய பங்கு ஏற்று இராணுவத்தை வழிநடத்தியவருமாவார்.

# சிகிச்சை நிலையம் மீண்டும் திறப்பு

(சாவகச்சேரி)

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் சிகிச்சை நிலையம், சாவகச்சேரி ஆஸ்பத்திரியிலேயே மீண்டும் திறக்கப்படவுள்ளது. இச் சிகிச்சை நிலையக் கட்டிடத்தை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் சுமார் 25 ஆயிரம் ரூபா வரையில் செலவுசெய்து புனரமைப்புச்செய்து கொடுத்துள்ளது. இதனை தென்மராட்சிப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரப்பிள்ளை இன்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளார்.

(35)

# யாழ். நகர்மீது சிறிலங்கா

# முப்படைகளும் பாரிய தாக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்க்குடாநாட்டின் எந்தப் பகுதியிலும் வீதிகளிலோ ஒழுங்கைகளிலோ எந்தத் தனி நபரைக் கண்டாலும் சுட்டுக் கொல்லப்படுவர் என சட்டம் பிறப்பித்த சிறிலங்கா அரசின் முப்படைகளும் கடந்த இருபத்திநான்கு மணி நேரமாக கடல், வான், தரை மார்க்கங்களாக தனது முழுப்பலத்தையும் பிரயோகித்து யாழ். மாவட்டத்தையே அழித்து வருகிறது.

யாழ். நகரில் கடந்த இருபத்தி நான்கு மணி நேரமாக சிறிலங்காவின் கடற்படைக் கப்பல்களும் விமானப்படைக் குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல் நடத்திய வண்ணம் உள்ளன. நேற்று முன்தினம் இரவு அவ்ரோ விமானங்கள் விடியும் வரைக்கும் வானில் வட்டமிட்டு நகரின் பல பகுதிகளிலும் தாக்குதல் நடாத்தியது. அதிகாலை ஐந்துமுப்பது மணியளவில் சிறிலங்கா அரசின் பாரிய குண்டுவீச்சு விமானம் கட்டிடங்களைத் தகர்த்தெறியும் பாரிய குண்டுகளை வீசியது. இக்குண்டுகள் நகரின் பலபகுதிகளையும் அதிர வைத்தது.

### கடலிலிருந்து செக்கனுக்கு ஒருகுண்டு

இந்தக் குண்டுவீச்சைத் தொடர்ந்து அதிகாலை ஆறு மணியளவில் மண்டைதீவுக் கடற்பகுதியில் ஏற்கனவே தரித்துநின்ற சிறிலங்கா கடற்படைக் கப்பல்களில் இருந்து கோட்டை இராணுவமுகாமை அண்டியகடற்கரைப்பகுதியை நோக்கி சரமாரியாக பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. செக்கனுக்கு ஒன்று என்ற வகையில் தொடர்ச்சியாக நண்பகல் வரை யாழ் நகரை நோக்கி கடற்படைக கப்பல்கள் பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தன. கப்பலிலிருந்து தீர்க்கப்பட்ட குண்டுகள் சுண்டிக்குளி, குருநகர்ப் பகுதிகளிலும் யாழ். நகரின் மத்தியில் இருந்து ஆனைப்பந்தி, நாவலர் வீதி வரைக்கும் வந்துவீழ்ந்தன.

காலை ஆறுமணியிலிருந்து மதியம் வரை பீரங்கித் தாக்குதல் நடைபெற்ற அதே வேளை, சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்களும் அவ்ரோ விமானங்களும். ஹெலிக்கொப்ரர்களும் யாழ் நகரின் பல்வேறு இடங்களிலும் தாக்கின.

### ஹெலிதாக்குதல்

சிறிலங்கா அரசின் தொலைத்தொடர்பு செய்திப் பரிவர்த்தனை ஊடகங்கள் ஊடாகவும் இந்தியவானொலி தொலைக்காட்சிகளூடாகவும் வெளியிடப்பட்ட ஊரடங்கு அறிவித்தலை அமுல்படுத்துவதில் சிறிலங்கா விமானப்படை ஹெலிக்கொப்ரர்கள் பெரும்பங்குவகித்தன. யாழ்ப்பாணம், சுன்னாகம், சாவகச்சேரி, மருதனாமடம், மானிப்பாய், தெல்லிப்பழை, நாவற்குளி, உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, பொலிகண்டி, கொடிகாமம், வல்வெட்டித்துறை என அனைத்துப் பகுதிகளிலும் நேற்று ஹெலித்தாக்குதல் நடைபெற்றது.

கடந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் நடை பெற்ற இந்தத் தாக்குதல்களில் பல பொதுமக்கள் உயிரிழந்ததுடன் ஏராளமானோர் காயமடைந்தும் உள்ளனர்.

கண்மூடித்தனமாக இராப்பகலாக நடைபெற்றுவரும் இந்த முப்படைத் தாக்குதல்களைத் தொடர்ந்து நகரை அண்டி வாழும் பொதுமக்கள் தமது வீடுவாசல்களை விட்டு பாதுகாப்புத்தேடி இடம்பெயரத்தொடங்கிவிட்டனர்.

இந்தச் செய்தி அச்சிலேறும் வரை யாழ். குடாநாடு பூராகவும் ஒரே நேரத்தில் மும்முனைத்தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(லோ)

### பீப்பாக்குண்டிற்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை பொலிகண்டிப்பகுதி வான் பரப்பில்வட்டமிட்ட அவ்ரோ விமானம் திடீரென தலைகுத்தி நடத்திய தாக்குதலில் ஏதுமறியாத இக்குழந்தை உயிரிழந்தது

(லோ)

### விமானம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னை செல்லவிருந்த அவ்விமானத்தை தன்னிடப வெடிகுண்டு இருப்பதாக கடத்தல்காரர் கூறி கொழும்பிற்குக் கொண்டு சொல்லுமாறு பணித்தார்.

ஆனால் விமானி புத்திசாதுரியமாக விமானத்தை பெங்களூரில் தரையிறக்கினார். அதைத் தொடர்ந்து இளைஞர் பொலிசால் கைது செய்யப்பட்டார்.

# 90ஆம் நாள் நினைவஞ்சலி

16- 06- 90 அன்று காங்கேசன்துறையில்
ஸ்ரீலங்கா படையினருடன் நடைபெற்ற
மோதலில் வீரமரணமடைந்த

## மேஜர் விவேகன் மாஸ்டர்

அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைத்
தெரிவிக்கின்றோம்.

ஜனனம்
12
|
06
|
1965



வீர மரணம்
16
|
06
|
1990

## மேஜர் விவேகன் மாஸ்டர்

(வல்லிபுரம் றமேஸன்)

வல்வெட்டித்துறை

இவர்களுடன் வீரமரணமடைந்த கப்டன் அன்சார் 2ஆம் லெப். ஸ்ராலின், தவா, சாளி, தரன், ஜெயராஜ் ஆகியோருக்கும் எமது வீர அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம.

போர்முனைக்குச் செல்லும் போராளிகள்
திரும்பி வருவார்கள் - நிச்சயமாக
சிலர் கனவுகளிலும் நினைவுகளிலும் மட்டும்
எம் கனவுகளிலும் நினைவுகளிலும்
வாழ்கின்ற வேங்கைகளே
நீங்கள் காலத்தால் அழியாத
காவிய நாயகர்கள்
ஆம் தமிழீழ மண்ணின் காவிய நாயகர்கள்

- நண்பர்கள்

(R- 627)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31- ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## புதுவகைக் குண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர் மீது நேற்று மாலை குண்டுவீசிய அவ்ரோ விமானம் இடையிடையே வெள்ளை நிறத்திலான உருண்டை வடிவிலான பொருட்களை வீசியது. அப்பொருட்கள் வெண்மைநிற புகைகக்கியபடி தரையை நோக்கி வந்துகொண்டிருந்த போது இடைக்கிடை தீபற்றியும் எரிந்தன. அவை நிலத்தில் வீழ்ந்த பின்பும் எரிந்துகொண்டிருந்தன.

### பீரங்கி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வென இரண்டுஹெலிக்கொப்டர்களும், மூன்று பொம்மர்களும் குண்டுகளை மாறி மாறி பொழிந்த வண்ணம் வானத்தில் வட்டமிட்டன.

அத்தோடு அப்படகுகளில் இரண்டு படகை கடற்படையினர் கஷ்டத்தின் மத்தியிலும் உடன் கட்டி இழுத்துச் சென்றனர். மிஞ்தி இரண்டு படகுகளும் மாலை நான்கு மணியளவில் கடற்படையினரால் மீட்கப் பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(றெ)

### இப்படியும்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சவனிப்பேன் என்று கூறினார் அச்சமயம் அந்தப் பெண்ணின் கணவனிடம் கையில்அந்தளவு பணம் இருக்க வில்லையாம் நிலைமையை விளங்கப்படுத்தியும் டாக்டர் விட்டுக் கொடுக்க வில்லை. இறுதியில் பெண்ணின் கழுத்தில இருந்த தங்கச் சங்கிலியைக் கொடுத்த பின்னர்தான் டாக்டர் மகப்பேற்றைக்கவனித்தார்.

## வைத்தியசாலை சுற்றுப்புறத்தில் ஹெலி சூடு

மானிப்பாயில் இயங்கிவரும் யாழ்ப்பாணம்போதனாவைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்றுப் பகல் ஹெலி பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியது.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது மக்களுக்குக் காயம் எதுவும் ஏற்படாதுவிட்டபோதிலும் பதற்றம் நிலவியது.

(லோ)

### விமானம் சுடடு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கடலினுள் சடலங்கள்

இவர்களது சடலங்கள் கடலுக்குள்ளும், கடற்கரைகளிலும் கிடக்கின்றன. இராணுவத்தினரை ஏற்றிவந்த படகுகளில் சிலமூழ்கடிக்கப்பட்டன காயமடைந்த பல இராணுவத்தினரைக் கைவிட்டு எஞ்சிய படகுகள் மண்டைதீவிற்கே தப்பிச் சென்றுவிட்டன.

தரையிறங்கிய ஒருசில இராணுவத்தினர் கோட்டைக்குள் சென்று விட்டனர்.

இராணுவத்தினரின் இம்முயற்சிக்கு உதவியாக வானிலிருந்து விமானங்களும், உலங்கு வானூர்திகளும் பறந்து பாரியதாக்குதலைத்தொடுக்க கடற்படைக் கப்பல்களிலிருந்தும்,மண்டைதீவுப்பகுதியிலிருந்தும் கோட்டை முகாமைச் சூழ இருந்த எமது நிலைகள் மீது ஆடலறிகள் மூலம் குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

### போராளிகள் சிலர் மரணம்

சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இப்பாரிய முப்படை நடவடிக்கையை முறியடிக்கும் யுத்தத்தில்எமது போராளிகள் சிலர் வீரமரணமடைந்தனர். இவர்களில் பெண்புலி அஞ்சலா உட்பட ஆனந்தபாபு, றெஜினோல்ட் ஆகியோரின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

### இரசாயனக் குண்டுவீச்சு

இதேசமயம் நேற்று மாலை 5 மணி தொடக்கம் 6 மணிக்கிடையில் சுமார் 10 இற்கும் மேற்பட்ட இரசாயனக் குண்டுகளைசிறிலங்காவான்படையின் குண்டுவீச்சுவிமானங்கள்யாழ். நகரப் பகுதியில் வீசிக்கொண்டிருந்தன.

விமானங்களிலிருந்து வீசப்பட்டவுடன் அடர்ந்த வெண்புகையுடன் கீழ்நோக்கிவரும் இவ்விரசாயனக குண்டுகளானது சிறிய சத்தததுடன் நிலத்தில் விழுந்துவெடித்துச்சிதறி புகை மண்டலமாகபபரவுகின்றது

இந்தப் புகையானது கண் எரிவை உண்டாக்குவதுடன், இதைச் சுவாசிப்பவர்களைச் சாதாரண மயக்க நிலைக்கு உள்ளாக்குவதாக இதனால் பாதிக்கப்படடவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று அதிகாலை இந்த இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முன்னர் இரவு முழுவதும் "அவ்ரோ" விமானங்களிலிருந்து தொடர்ச்சியாக நகர்ப் பகுதியெங்கும் பீப்பாக் குண்டுகள வீசப்பட்டுக்கொண்டிருந்தன.

### எமது நிலைகளில் உறுதியாகவுள்ளோம்

இராணுவத்தின் இப்பாரிய முயற்சி முறியடிக்கப்பட்டதுடன் கோட்டை முகாமைச் சுற்றியுள்ள எமது நிலைகளில் தொடர்ந்தும் நாம்உறுதியாக நிலைகொண்டுள்ளோம்.

### ஆயர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை குடாக்கடல் கரையோரமாக இருக்கும் குருநகர் தொடர்மாடிக் கட்டிடமும், குருசோவீதி, பாஷையூர் ராசாவின் தோட்டம் ஆகிய பகுதிகளும் பலத்த சேதமடைந்தன.

## தனங்கிளப்பில் குண்டுவீச்சு

சாவகச்சேரி தனங்கிளப்பு வெளியில் நேற்று ஹெலிக்கொப்ரரும் குண்டுவீச்சு விமானங்களும் துப்பாக்கி வேட்டு குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

நேற்றுக் காலை பத்துமணியளவில் சாவகச்சேரிப் பகுதியை வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுக்களை ஹெலிக்கொப்ரர் தீர்த்தது. அதேசமயம் மூன்று விமானப்படை குண்டு வீச்சு விமானங்கள் தனங்கிளப்பு வெளியில் கடுமையாகத் தாக்கின. இத்தாக்குதலால் கேரதீவு சாவகச்சேரி வீதிப்பகுதியில் திடீரென பெரும் புகைமண்டலம் எழுந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

குண்டு வீச்சுகளும் துப்பாக்கி வேட்டுக்களும அகோரமாக மேற்கொள்ளப்பட்டபோதிலும் எவருக்கும் காயமேதும் ஏற்படவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கதாகும்.

(லோ)

## குவைத்தில் 4 இலங்கையர் மரணம்

(பாக்தாத்)

குவைத்தில் வேலைபார்த்து வந்த இலங்கையைச் சேர்ந்த இருவர் ஈராக் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும். மேலும் இரு இலங்கையர்கள் நோயினால் மருத்துவ மனையில் இறந்ததாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஒரு அதிகாரி பலி இருபடை காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்வத்தை என்னுமிடத்தில் சிறிலங்கா அதிரடிப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு அதிகாரி கொல்லப்பட்டார். இரு இராணுவ வீரர் காயமடைந்தார்கள் எனவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

### கோட்டை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும், கோட்டை முற்றுகை உடைப்பிற்கு கஜபாகு விசேட அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த 360 வீரர்கள் பங்குபற்றியதாகவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

இந்த இராணுவ நடவடிக்கையின போது பண்ணைப் பாலம் இராணுவத்தால் செப்பனிடப்பட்டதாகவும் தெரிவித்த அந்த செய்தி சிறிலங்காவின் முப்படைத் தளபதிகளும் இத்தாக்குதல் சம்பவத்தை நேரில் காண யாழ். கோட்டைக்கு வந்ததாகவும் செய்திகள் தெரிவிகின்றன.

இச்சண்டையில் நூற்றுக்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்த இராணுவ வட்டாரங்கள் தமது தரப்பில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 40 இராணுவத்தினர் காயமடைந்ததாகவும், மூன்று கடற்படையினர் இறந்ததாகவும், ஒரு விமான ஓட்டி இறந்ததாகவும், ஒருவரைக் காணவில்லை எனவும் தெரிவித்தது.

### வீரமரணம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னரின் துப்பாக்கி வேட்டுக்கு கலாபரன் மனோரச்மோகன் என்ற போராளி வீரமரணம் அடைந்தார்.

இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.